தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 14 மடல் 4 ஏப்ரல் – 2014 ₹1.00

## பல்கலைக்கழகத்தின் 23ஆவது திட்டக் குழுக் கூட்டம்



பல்கலைக்கழகத்தின் 23ஆவது திட்டக் குழுக் கூட்டம் 26.03.2014அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் திட்டக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவித் தலைமை இயக்குநர் (ஓய்வு) முனைவர் எஸ்.சி. குப்தா, எஸ்.வி.பி. வேளாண் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் எம்.பி. யாதவ், தேசிய வேளாண்மைப் பொருளியல் மற்றும் கொள்கை ஆராய்ச்சி மையத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர் பி.எஸ். பிர்தால், தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறையின் கூடுதல் இயக்குநர் (நியமன உறுப்பினர்) டாக்டர் பி. ராஜசேகரன், நாமக்கல் கோழிப் பண்ணையாளர் திரு. எஸ். ரங்கநாதன் மற்றும் திட்டக்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றுத் தமது கருத்துகளைத் தெரிவித்தனர். பல்கலைக்கழக அதிகாரிகள் அனைவரும் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## பல்கலைக்கழகத்தின் 23ஆவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டம்

பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநரகம்மூலம் 23ஆவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டம் 12.03.2014 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்துக் கருத்துரை வழங்கினார். கூட்டத்தில் மத்திய அரசின் உயிர்த் தொழில்நுட்பத் துறையின் ஆலோசகர் முனைவர் எஸ்.ஆர்.ராவ், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கூடுதல் உதவி இயக்குநர் (கால்நடை நலம்) முனைவர் கயாபிரசாத், தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறையின் கூடுதல் இயக்குநர் டாக்டர் பி. ராஜசேகர் ஆகியோர் வல்லுநர்களாகப்




பங்கேற்றனர். பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மையத்தின்மூலம் தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட கால்நடை வளர்ப்பு குறித்த 23 பட அட்டைகள், 2 வெளியீடுகள் மற்றும் 8 குறுந்தகடுகள் வெளியிடப்பட்டன. பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கா. குமணன் அவர்கள், 2013ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் பெற்ற புதிய திட்டங்கள் மற்றும் அவ்வாண்டு முடிவுற்ற திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கியதோடு முந்தைய கூட்ட விவாதத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துக்கூறினார். முடிவுற்ற ஆராய்ச்சித் திட்டங்களின் முதன்மை ஆய்வாளர்கள், தங்களது திட்ட ஆராய்ச்சி முடிவுகள் குறித்து விளக்கிக் கூறினர். பல்கலைக்கழக அதிகாரிகள்; ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், வேளாண் அறிவியல் மையங்கள், உழவர் பயிற்சி மையங்களின் தலைவர்கள் மற்றும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் துறைத் தலைவர்கள் உள்ளிட்ட ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## பல்கலைக்கழகத்தின் 25ஆவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டம்




பல்கலைக்கழக விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டம் 20.03.2014அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, “ஒருங்கிணைந்த ஈ கட்டுப்பாடு”,

“தொழில்மயமாகி வரும் கால்நடைப் பண்ணைத் தொழில்கள்”, “சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கான ஒருங்கிணைந்த பண்ணை உத்திகள்” ஆகிய மூன்று புத்தகங்களை வெளியிட்டுக் கருத்துரை வழங்கினார். பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள், 24ஆம் விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்ட நடிவடிக்கைகள் மற்றும் 2013ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட விரிவாக்கப் பணிகள் பற்றிய அறிக்கை சமர்ப்பித்தார். கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் கே.ஏ. பொன்னுசாமி , கேரள வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் விரிவாக்கத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். பாஸ்கரன், விரிவாக்க வல்லுநர்கள், முன்னோடி விவசாயிகள், விரிவாக்கக் கல்விக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றுக் கருத்துகள் வழங்கினர். பல்கலைக்கழகத்தின் பல்வேறு பயிற்சி மையங்களில் நடத்தப்படும் முதலமைச்சரின் விலையில்லாக் கறவைமாடு மற்றும் ஆடு வழங்கும் திட்டப் பயனாளிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் பொருட்டுத் தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்ட நிதியுதவியில் உருவாக்கப்பட்ட செம்மறியாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, கறவைமாடு வளர்ப்பு குறித்த விளக்கப்படங்களைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கா. குமணன் அவர்கள் விரிவாக்கக் கல்வி இயக்குநரிடம் அளித்தார். விரிவாக்கக் கல்விக் குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள், பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், வேளாண் அறிவியல் நிலையங்கள், உழவர் பயிற்சி மையங்கள் மற்றும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் துறைத் தலைவர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## பயனாளிகள் கூட்டம்

பன்னாட்டு உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் நடைபெற்று வரும் “பூஞ்சான் நச்சு கொண்ட மக்காச் சோளத்தின் விற்பனைத் தொடர் மற்றும் அதனால் கோழியினத்தில் ஏற்படும் தாக்கம் பற்றிய ஆய்வு” என்ற ஆராய்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக “மக்காச்சோளப் பயனாளிகள் கூட்டம் – கலந்துரையாடல்” நிகழ்ச்சி, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்பு பொருளியல் துறை மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வகம்மூலம் 20.03.2014 அன்று நடத்தப்பட்டது. புதுதில்லியிலுள்ள பன்னாட்டு உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் தெற்காசிய இயக்குநர் முனைவர் பி.கே. ஜோஷி அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, பயனாளிகளுடன் கலந்துரையாடினார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் சி. இராமசாமி அவர்கள் சிறப்புரை ஆற்றித் தம் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். கோடுவெளி, உணவு மற்றும் பால் வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

## பயிலரங்கு

- பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையும், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை வணிக மேலாண்மைத் துறையும் இணைந்து “வர்த்தக ரீதியிலான வெள்ளாடு வளர்ப்பு” என்ற ஒரு நாள் பயிலரங்கை 19.03.2014அன்று பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை வளாகத்தில் நடத்தின. பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பயிற்சிக் கையேடு வெளியிட்டார். பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள்




வரவேற்புரை நிகழ்த்தினார். கண்காட்சியும், கலந்துரையாடல் அமர்வும் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டின் வெவ்வேறு பகுதிகளைச் சார்ந்த 3 மகளிர் உட்பட 41 ஆடு வளர்ப்போர் பங்கேற்றனர்.

- கால்நடை உயிர்த் தொழில்நுட்பவியலில் சிறப்பு உயராய்வுத் திட்டத்தின் கீழ் “கோழிகளைத் தாக்கும் நச்சுயிரி வகைகளைக் கண்டறிதல் மற்றும் மரபணு தொகுதியாக்க முறைகள்” பற்றிய பயிலரங்கு, 20.03.2014 மற்றும் 21.03.2014ஆம் தேதிகளில், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உயிர்த்தொழில்நுட்பவியல் துறையில் நடத்தப்பட்டது. முதுநிலை மற்றும் முனைவர் பட்டம் பயிலும் மாணாக்கர்கள் பயனடையும் வகையில் இந்தப் பயிலரங்கு நடத்தப்பட்டது. பயிலரங்கில் கலந்து கொண்டு 15 முதுநிலை மற்றும் முனைவர் பட்டம் பயிலும் மாணாக்கர்கள் பயன்பெற்றனர். பயிலரங்கின் நிறைவு விழாவில் திட்டத்தின் முதன்மை ஆய்வாளரும் பயிலரங்கின் ஒருங்கிணைப்புச் செயலருமான முனைவர் கா. குமணன் அவர்கள் பயிலரங்கு பற்றி விளக்கினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் (பொ.) முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

- காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுநிலை ஆராய்ச்சி நிலையமும், தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறையின் அறிவியல்



நகரப் பிரிவும் இணைந்து “ஊரக மக்களின் சமூக பொருளாதார உயர்விற்கு அறிவியல்” குறித்த ஒரு நாள் பயிலரங்கை நிலைய வளாகத்தில் மூன்று தொகுதியாக 19.03.2014, 20.03.2014, 21.03.2014ஆம் தேதிகளில் நடத்தின. விரிவுரைகளோடு கலந்துரையாடல் அமர்வுகள் மற்றும் செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டன. பங்கேற்பாளர்களுக்குப் பயிற்சிக் கையேடுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 21.03.2014அன்று நடைபெற்ற பயிலரங்க நிறைவு விழாவிற்குக் கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் தலைமை வகித்தார். அறிவியல் நகரப் பிரிவின் அறிவியல் அலுவலர் டாக்டர் ஜெ. தேவசேனாபதி அவர்கள் காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுநிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து நிகழ்ச்சியை நடத்தினார். மொத்தம் 104 பண்ணையார்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## கல்விநிலையப் பணிகள்

## சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி

### ஆளுமைத் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை வணிக மேலாண்மைத் துறைமூலம் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களுக்காக ஆளுமைத் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி 13.03.2014முதல்15.03.2014வரைநடத்தப்பட்டது. சென்னைகால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்தார். இளநிலைக் கால்நடை மருத்துவ அறிவியல் பட்டம் மற்றும் பி.டெக். (உணவுப் பதப்படுத்தல்) பட்டம் பயிலும் 126 இறுதியாண்டு மாணவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடி, பயிற்சி பற்றிய அனுபவங்களைக் கேட்டறிந்தார். தமிழ்நாடு அரசின் முன்னாள் காவல்துறைத் தலைவர் டாக்டர் சி.எல். ராமகிருஷ்ணன் அவர்கள் சான்றிதழ்கள் வழங்கினார்.

### புத்தகக் கண்காட்சி



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலகவியல் துறை, புத்தகக் கண்காட்சியை 19.03.2014 மற்றும் 20.03.2014ஆம் தேதிகளில் நடத்தியது. கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் கண்காட்சியைத் துவக்கிவைத்தார். பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சொ. ரா. சீனிவாசன் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்தார். பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் பல்கலைக்கழக அதிகாரிகளுடன் புத்தகக் கண்காட்சியை 20.03.2014அன்று பார்வையிட்டார். பல்கலைக்கழகப் பேராசிரியர், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் உள்பட மொத்தம் 150பேர் கண்காட்சியைக் கண்டுகளித்தனர்.

### சிறிய பிராணிகள் அறுவைச் சிகிச்சை அரங்கு துவக்கம்

சிறிய பிராணிகளில் இனப்பெருக்க அறுவை மருத்துவம் செய்தல் மற்றும் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட



மாணவர்களுக்குச் செயல்முறைப் பயிற்சி அளித்தல் பொருட்டுச் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் ஈனியல் மற்றும் இனப்பெருக்கத் துறையில் புதிதாகச் சிறிய பிராணிகள் அறுவைச் சிகிச்சை அரங்கு நிறுவப்பட்டுள்ளது. இவ்வரங்கைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் 20.03.2014அன்று துவக்கிவைத்தார்.

### உறைநிலையில் விந்து பாதுகாத்தல் மற்றும் அவற்றின் தரத்தினைப் பகுப்பாய்வுமூலம் உறுதிசெய்தல் பயிற்சி



“உறைநிலையில் விந்து பாதுகாத்தலும் அவற்றின் தரத்தினைப் பகுப்பாய்வுமூலம் உறுதிசெய்தலும்” பற்றிய ஐந்து நாள் பயிற்சி, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் விலங்கின மரபியல் மற்றும் இனவிருத்தித் துறையின் உறைவிந்து வங்கிமூலம் 03.02.2014 முதல் 07.02.2014வரை நடைபெற்றது. பயிற்சியில் குஜராத், உத்திரபிரதேசம், தமிழ்நாட்டிலிருந்து மொத்தம் 12 பேர் பங்கேற்றனர். பங்கேற்பாளர்களுக்கு விரிவுரைகளோடு செயல்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. மேலும், பயிற்சிக் கையேடு வழங்கப்பட்டது. கல்லூரியின் விலங்கின மரபியல் மற்றும் இனவிருத்தித் துறையின் முன்னாள் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம். ஜான் எட்வின் அவர்கள் சிறப்பு விரிவுரை வழங்கினார்.

### டாக்டர் பொற்செழியன் நினைவு ஹாக்கிப் போட்டி



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் இரண்டாவது டாக்டர் பொற்செழியன் நினைவு ஹாக்கிப் போட்டி 20.03.2014முதல் 22.03.2014வரை நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் போட்டியைத் துவக்கிவைத்தார். சென்னை, இந்தியத் தொழில்நுட்பக் கழகம் கோப்பையை வென்றது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் ஏ அணியினர் இரண்டாமிடத்தையும், பி அணியினர் குழுப் பரிசும் வென்றனர். கல்லூரி மாணவர் செல்வன் ஆர். விவேகானந்தன் மற்றும் செல்வன் ஜெ. கார்த்திக் ஆகியோர் முறையே சிறந்த கோல் கீப்பர் பரிசும், சிறந்த கோல் தடுப்பாளர் பரிசும் வென்றனர். 22.03.2014அன்று நடைபெற்ற நிறைவு விழாவில்

கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கா. குமணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கோயம்புத்தூர் சுரபி இனப்பெருக்கப் பண்ணையின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். ருக்மாங்கதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, நிறைவுரை ஆற்றிப் பரிசுகள் வழங்கினார்.

## நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### மகளிர் தின விழா

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தேசிய நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவு 10.03.2014 அன்று உலக மகளிர் தினத்தைக் கொண்டாடியது. கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ரெட் ரிப்பன் கிளப்பைக் குத்து விளக்கேற்றித் துவக்கிவைத்து உரையாற்றினார். நாமக்கல், மனவளக் கலைமன்ற அறக்கட்டளையின் யோகா ஆசிரியர் திரு. ஆர். வெங்கடாசலம் அவர்கள் "பெண்ணியத்தின் மாண்புகள்" குறித்துச் சிறப்புரை ஆற்றினார்.

## திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### கறிக்கோழி வளர்ப்புப் பயிற்சி



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் தமிழ்நாடு அரசின் கோழியின மேம்பாட்டுத் திட்டத்தின் 109 பயனாளிகளுக்கு "கறிக்கோழி வளர்ப்பு" குறித்த ஐந்து நாள் பயிற்சி, கல்லூரியின் இராமையன்பட்டி வளாகத்தில் நான்கு தொகுதியாக 17.02.2014 –21.02.2014, 24.02.2014– 28.02.2014, 03.03.2014–08.03.2014, 10.03.2014 –14.03.2014 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. கல்லூரியின் பேராசிரியர்கள்மூலம் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளுடன் குஞ்சுபொரித்தல், தீவனமளித்தல், தண்ணீர் அளித்தல் மற்றும் கறிக்கோழி வளர்ப்பு குறித்த செயல்முறைப் பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சியாளர்கள் வணிகமுறையிலான கறிக்கோழிப் பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள், பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்குச் சான்றிதழும், "கறிக்கோழி வளர்ப்பு" புத்தகமும் வழங்கினார்.

## ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### உயர்தர முர்ரா எருமை பொலிகாளை தாய்ப் பண்ணை உருவாக்கம்

ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உயர்தர முர்ரா எருமை பொலிகாளை தாய்ப்



பண்ணைப் பிரிவு, தமிழக அரசின் பகுதி–II திட்டத்தின் கீழ் ரூபாய் 30 இலட்சத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக ஹரியானா மாநிலத்திலிருந்து 16 உயர்தர முர்ரா எருமை பொலிகாளைகள் வாங்கப்பட்டுள்ளன.

### கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், கால்நடைப் பராமரிப்புத் துறையும் இணைந்து 03.03.2014 முதல் 21.03.2014வரை சிறப்புக் கோமாரி நோய்த் தடுப்பு ஊசி முகாமை நடத்தின. முகாமில் ஒரத்தநாட்டைச் சுற்றியுள்ள 11 கிராமங்களான தென்னமநாடு, புலனவன்காடு, தெலுங்கங்குடிகாடு, உறந்தராயன்குடிகாடு, கண்ணந்தங்குடி மேலையூர், கண்ணந்தங்குடி கீழையூர், கக்கரை, புதூர், பாளம்பத்தூர் மற்றும் ஒரத்தநாட்டில் உள்ள 4374 கறவை, எருமை மற்றும் உழவு மாடுகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி இலவசமாகப் போடப்பட்டது.

## விரிவாக்கப் பணி

## இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சியில் பல்கலைக்கழகம் பங்கேற்பு

பல்கலைக்கழகத்தின் சார்பில் விரிவாக்கக் கல்வி இயக்ககம் சென்னைத் தீவுத்திடலில் 23.12.2013 முதல் 26.03.2014 வரை நடைபெற்ற இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி–2014இல் பங்கேற்றது. கோழி, கினிக் கோழி, வான்கோழி மற்றும் ஜப்பானியக் காடை வகைகள், பல்வேறு வகையிலான கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த விளக்கப்படங்கள், மதிப்புக் கூட்டிய பொருட்கள், பல்கலைக்கழகம் வழங்கும் படிப்புகள், செயல்திறன், சுயவேலைவாய்ப்பு மற்றும் அஞ்சல்வழிப் பயிற்சிகள், வீடியோ பாடங்கள், பல்கலைக்கழகப் பயிற்சி மையங்கள் குறித்த விவரம், ஆடு, கோழி, கறவை மாடு மற்றும் வெள்ளாட்டுப் பிரிவுகளின் மாதிரிகள், அறிவியல் ஆர்வலர்களுக்கான கலந்துரையாடல் அமர்வுகள் ஆகியவை இடம்பெற்றன. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பொருட்காட்சியைப் பார்வையிட்டவர்களுக்கு வேண்டிய தொழில்நுட்ப உதவிகளையும், சந்தேகங்களுக்கு விளக்கங்களையும் அளித்தனர்.

### செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் வெள்ளாடு வளர்ப்பு, கறவைமாடு வளர்ப்பு, பால் பண்ணை உதவியாளர், நாட்டுக்கோழி வளர்ப்பு, ஜப்பானியக் காடை வளர்ப்பு, உறைமோர்மூலம் பால் பொருட்கள் தயாரிப்பு குறித்த செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள், கோயம்புத்தூர் மற்றும் மேல்மருவத்தூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், நாமக்கல் கால்நடைப் பண்ணை பயிற்றுவிக்கும் வளாகம், மாதவரம் கோழியின ஆராய்ச்சி நிலையம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் பால்வள அறிவியல் துறை ஆகியவற்றில் மார்ச் 2014இல் நடத்தப்பட்டன. பயிற்சிகளில் 14 பேர் பதிவுசெய்து, பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்தனர்.

## பயிற்சி

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், "ஆடு வளர்ப்பில் நன்மை தீமைகள்" குறித்த ஒரு நாள் பயிற்சியை 25.03.2014அன்று நடத்தியது. 2 பண்ணை மகளிர் உட்பட 41 பண்ணையாளர்கள் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர். இம் மையம், "பால்பண்ணை வணிகம்" குறித்த ஒரு நாள் பயிலரங்கைக் கரூர் மாவட்டத்தின் தாந்தோணிமலை அரசு கல்லூரியின் பொருளியல் துறை மாணவர்களுக்காக 04.03.2014அன்று நடத்தியது. இதில் அறிவியல் முறையில் கறவைமாடு வளர்ப்பும், பண்ணைக் கருவிகளும் பற்றிய கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இம்மையமானது கரூர் கால்நடைப் பராமரிப்புத் துறைமூலம் 01.03.2014 முதல் 21.03.2014 வரை நடத்தப்பட்ட கோமாரி நோய்த் தடுப்பு விழிப்புணர்வு முகாமில் கலந்துகொண்டு, கால்நடைப் பண்ணையாளர்களுக்குக் கோமாரி நோயினால் ஏற்படும் இழப்பு மற்றும் தடுப்பு முறைகள் பற்றி விரிவாக விளக்கியது.

- தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கிருஷ்ணகிரி வேளாண்மைத் துறையின் ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை முகமையுடன் இணைந்து "கால்நடை வளர்ப்பு " பயிற்சியை இரு பிரிவுகளாக மைய வளாகத்தில் 03.03.2014 மற்றும் 07.03.2014ஆம் தேதிகளில் நடத்தியது. கிருஷ்ணகிரி மாவட்டத்தின் தளி வட்டத்தைச் சார்ந்த பாளையங்கோட்டை மற்றும் உப்பராயனபள்ளி கிராமங்களின் 49 கால்நடை வளர்ப்போர் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெற்றனர். இம்மயம், தருமபுரி உழவர் பயிற்சி மையத்துடன் இணைந்து, ஹைட்ரோபோனிக் முறையில் தீவன வளர்ப்பு குறித்த செயல்முறை விளக்கத்தைத் தருமபுரி மாவட்டத்தின் ஆதகபாடி கிராமத்தில் 28.03.2014அன்று அளித்தது. மொத்தம் 25 முன்னோடிப் பண்ணையாளர்கள் பயன்பெற்றனர். இம்மையமும், சென்னை தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமையும், தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையமும் இணைந்து மலட்டுத்தன்மை நீக்க முகாமைத் தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், சிட்லிங் கிராமத்தில் 24.03.2014அன்று நடத்தின. முகாமில் 200 கறவை மாடுகள் மற்றும் எருமைகள் மற்றும் 35 கன்றுகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

- காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் நிலையம், ஹைட்ரோபோனிக் முறையில் பசுந்தீவன உற்பத்தித் தொழில்நுட்பம் குறித்த சிறப்புக் கருத்தரங்கைத் தமிழ்நாட்டின் கால்நடைப் பண்ணையாளர்களுக்காக 26.03.2014அன்று நிலையத்தில் நடத்தியது. காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, மதுரை, ஈரோடு, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த 117 கால்நடைப் பண்ணையாளர்கள் கருத்தரங்கில் பங்கேற்றுப் பயன்பெற்றனர். இந்நிலையம் உலக மகளிர் தினத்தை 19.03.2014அன்று காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம் கிராமத்தில் கொண்டாடியது. நந்திவரம் அறிவொளி இயக்கச் சங்கத்தின் 35 மகளிர் சுய உதவிக் குழுவினர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கான விழிப்புணர்வு முகாம்

மதுரை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், "கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு" சிறப்பு விழிப்புணர்வு முகாமை மதுரையின் புதூரில் உள்ள அன்பகம் மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத்திறனாளிகள் பள்ளி மாணவர்களுக்காக 28.02.2014அன்று நடத்தியது. மொத்தம் 150 மாணவர்களுக்குக் கால்நடை இனங்கள், கொட்டகை அமைப்பு,



கால்நடைத் தேர்வு, தீவன மேலாண்மை, இனப்பெருக்க மேலாண்மை, நோய் மேலாண்மை, முக்கியப் பசுந்தீவனச் சாகுபடி, குடற்புழு நீக்கத்தின் முக்கியத்துவம், தடுப்பு மருந்து அளித்தல், முதலுதவி மருத்துவம் ஆகியவை குறித்துக் கோட்பொலிக் கருவிகள்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

## இலவச கால்நடை நல முகாம்

- சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறையில் செயல்பட்டுவரும் க்ராமின் க்ருஷி மௌசம் சேவாவும், வேலூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் இணைந்து, "வானிலை அடிப்படையில் கால்நடை மற்றும் கோழிப் பராமரிப்பு" குறித்த இலவச கால்நடை நல முகாம் மற்றும் பண்ணையாளர் விழுப்புணர்வு முகாமை வேலூர் மாவட்டத்தின் கீழரசம்பட்டு கிராமத்தில் 03.03.2014அன்று நடத்தின. மொத்தம் 124 கால்நடை மற்றும் கோழிகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. முகாமில் பங்கேற்ற முன்னோடிப் பண்ணையாளர்கள் மற்றும் 100 விவசாயிகளுக்கு 50 தனுவாஸ் ஸ்மார்ட் தாதுஉப்புக் கலவை பாக்கெட்டுகள் வழங்கப்பட்டன.

- வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமானது வேலூர் கால்நடைப் பராமரிப்புத் துறையும், யோகா ஷேமா அறக்கட்டளையும் இணைந்து, வேலூர் மாவட்டம் தண்டலம் கிராமத்தில் 06.03.2014அன்று நடத்திய கால்நடை நல முகாம் மற்றும் கிராம விழிப்புணர்வு முகாமில் பங்கேற்றது. மொத்தம் 558 கால்நடை மற்றும் 40 கோழிகளுக்குச் சிகிச்சையும், தடுப்பூசியும் அளிக்கப்பட்டன.

## பரிசு



திருச்சிராப்பள்ளி செயின்ட் ஜோசப் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவு மாநில அளவில் நாட்டுநலப் பணித் திட்டத்

Posted on 23.04.2014 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 21.04.2014

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/12-14
Registration No.TN/TBM/32/2012-14

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. D. Thyagarajan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Printing Press, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. D. Thyagarajan, M.V.Sc., Ph.D.,** **Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**

தன்னார்வலர்களுக்காக 13.03.2014அன்று நடத்திய "சாம்பெஸ்ட் –14"இல் பங்கேற்ற நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் இளநிலை இறுதியாண்டு மாணவர்கள் செல்வன் ஜி. சரவணன், செல்வி வி. சரண்யா, செல்வன் எம். திவாஹர் ஆகியோர் எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்த தமிழ்ப் பேச்சுப் போட்டி, தமிழ்க் கட்டுரைப் போட்டி, கவிதை எழுதுதல் போட்டியில் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளை வென்றனர்.

## நாட்டுநலப் பணித் திட்டச் செயல்பாடு

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பாக சிறப்பு முகாம் 27.02.2014 முதல் 05.03.2014 வரை நாமக்கல் மாவட்டம், முத்துக்காளிப்பட்டி மற்றும் மசக்காளிப்பட்டி கிராமங்களில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் குத்துவிளக்கேற்றி முகாமைத் துவக்கி வைத்தார். இதில் 100 நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டு, மரக்கன்றுகளை நட்டனர் மற்றும் மரக்கன்றுகளைக் கிராம மக்களுக்கு வழங்கினர். மேலும், மதிப்புக் கூட்டிய பொருட்கள் தயாரித்தல் குறித்த செயல்விளக்கமும், கால்நடை குறித்த தகவலும் சேகரித்தனர். ராணிக்கெட் நோய்க்கு எதிராகக் கோழிகளுக்குத் தடுப்பூசி அளித்தனர். ஆல்ஹகாலின் பாதிப்பு மற்றும் ஓட்டளித்தல் குறித்த விழிப்புணர்வு முகாமிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. திருச்செங்கோடு, விவேகானந்தா மகளிர் பல் மருத்துவக் கல்லூரி, நாமக்கல் வாசன் கண் மருத்துவமனை மற்றும் சேலம் விநாயகா மிஷன் மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து முறையே பல் மருத்துவ முகாம், இரத்த வகை கண்டறிதல் மற்றும் கண் மருத்துவ முகாம் மற்றும் பொது உடல்பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன. மொத்தம் 802 கிராம மக்கள் பயன்பெற்றனர். கல்லூரியின் சிகிச்சைத் துறைமூலம் 05.03.2014அன்று கால்நடை நல முகாம் நடத்தப்பட்டு, 462 கால்நடைகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. முகாமின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் தலைமை வகித்து, உரையாற்றினார். பல்கலைக்கழக நாட்டுநலப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் எஸ். மீனாட்சிசுந்தரம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

## தேசிய மாணவர் படை

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தேசிய மாணவர் படை மூலம் சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுக் கண்காட்சி 13.03.2014 அன்று நடத்தப்பட்டது. கண்காட்சியை நாமக்கல் வட்டாரப் போக்குவரத்து



அலுவலர் திரு. ச.வேலுசாமி அவர்கள் துவக்கிவைத்துச் சிறப்புரை ஆற்றினார். விழாவில் கல்லூரி முதல்வர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் தலைமையுரை ஆற்றினார். முனைவர் ப. செல்வராஜ் மற்றும் முனைவர் ச. தர்மசீலன் ஆகியோர் சாலைப் பாதுகாப்பின் அவசியம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர். இறுதியாண்டு மாணவி ந. மகாலட்சுமி அவர்கள் சாலை விதி குறித்துச் சிற்றுரை ஆற்றினார்.

## பணி ஓய்வு



பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தின் இளநிலைப் பொறியாளர் திரு. எபினேசர் ஜெயகுமார் ஜோன்ஸ் அவர்கள் 31.03.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 23.03.1956இல் பிறந்த இவர், 31 ஆண்டும், 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



மதுரை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய உதவியாளர் திரு. எஸ். ஐயனார் அவர்கள் 31.03.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 05.03.1956இல் பிறந்த இவர், 30 ஆண்டும், 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுநிலை ஆராய்ச்சி நிலையத் திறனறி பணியாளர் (சிறப்பு நிலை) திரு.எம். மணி அவர்கள் 31.03.2014அன்று பணி ஓய்வு பெற்றார்.